வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 19/2021

வழக்கு சாட்சி LW5 / PW2

| பெயர் | மணிகண்டன் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | பொய்யா முருகன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 36 |

தேதி 14.05.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் காவாங்கரை பகுதியில் குடியிருந்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலீஸ் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.**

கடந்த 07.10.2017 மாலை 15.00 மணியளவில் கதிர்வேடு மேம்பாலம் அருகில் நானும், எனது நண்பரான விமலும் நின்றுகொண்டிருந்தபோது அங்கு புழல் ஆய்வாளர் மற்றும் போலீசார் ஒரு நபரை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அப்போது புழல் ஆய்வாளர் என்னையும் எனது நண்பரான விமலையும் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவர் 07.10.2017 மதியம் 12.30 மணியளவில் லட்சுமிபுரம் ஜங்ஷன் அருகே ஒரு நபரிடம் கத்தியை காட்டி ரூ. 1000த்தை பறித்து சென்றதாக ஒப்புக்கொண்டு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அந்த கத்தி மற்றும் பணம் ரூ.1000த்தை தனது பாக்கெட்டில் மறைத்து

வைத்திருந்ததினை எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்து அதனை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் எங்களது முன்னிலையில் கைப்பற்றியபோது சாட்சியாக இருக்க கோரி நான் சம்மதித்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பத்தினை செய்துவிட்டு போலீஸ் விசாரணையின்போதும் மேற்படி தகவலை கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.